# மத்திய அரசு புதுச்சேரி நலனில் மாற்றாந்தாய் மனப்பான்மையைக் கடைப்பிடிக்கிறது

## முதல்வர் வி. நாராயணசாமி குற்றச்சாட்டு





இயந்திரத்தை இயக்கி வைக்கும் புதுச்சேரி முதல்வர் வி. நாராயணசாமி. உடன், அமைச்சர்கள் ஆர். கமலக்கண்ணன், எம். கந்தசாமி, எம்.எல்.ஏ.க்கள் கீதா ஆனந்தன், கே.ஏ.யு. அசனா, ஆட்சியர் ஆர். கேசவன், துறைமுகத் தலைவர் ஜி.ஆர்.கே. ரெட்டி. (வலது) சரக்குகளை கையாள அமைக்கப்பட்டிருக்கும் நவீன இயந்திரம்.

**காரைக்கால், அக். 30:** மத்திய அரசு புதுச்சேரி நலனில் மாற்றாந்தாய் மனப்பான்மையைக் கடைப்பிடிக்கிறது என புதுச்சேரி முதல்வர் வி. நாராயணசாமி குற்றஞ்சாட்டினார்.

காரைக்கால் துறைமுகத்தில் ரூ. 600 கோடி மதிப்பீட்டில் பெரிய அளவு சரக்கு கையாளுதல் பணி இயந்திரமயமாக்கப்பட்டுள்ளது. இதை இயக்கிவைக்கும் நிகழ்ச்சி துறைமுக வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

புதுச்சேரி முதல்வர் வி. நாராயணசாமி இயந்திரத்தை இயக்கி வைத்துப் பேசியது:

துறைமுகம் இங்கு தொடங்கப்படும்போது பல்வேறு பிரச்னைகள், வழக்குகளுக்குப் பின்னர் தீர்வு காணப்பட்டது. புதுச்சேரியில் காங்கிரஸ் ஆட்சி இருந்தபோது இதற்கு அனுமதி தரப்பட்டது. காரைக்கால் பிராந்தியம் இதன்மூலம் வளர்ச்சியடையும் என்ற நம்பிக்கையில் இதை செய்தோம். அப்போது காரைக்கால் புறக்கணிக்கப்படுகிறது என்கிற கோஷம் ஓங்கியிருந்தபோது, மத்தியில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சிக் காலத்தில் காரைக்காலில் இருந்து இந்தியாவின் பல இடங்களுக்கு நாள்தோறும் இயக்கும் வகையில் 11 ரயில்களை கொண்டு வந்தோம்.

என்.ஐ.டி., கேந்திரிய வித்யாலயா போன்ற கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தினோம். காரைக்கால் - பேரளம் அகல ரயில் பாதை அமைப்புத் திட்டத்தை அறிவித்தோம். இப்போது இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த காரைக்கால் மாவட்ட எல்லையில் உள்ள நிலப்பரப்புக்குரிய நிதியை ரயில்வே நிர்வாகத்துக்கு தருவதாகக் கூறியுள்ளோம். காரைக்காலில் இருந்து பேரளம் வரை உள்ள திட்டப் பணிக்கு புதுச்சேரியால் நிதி தர முடியாது. தமிழகப் பகுதிக்கான நிதியை அம்மாநில அரசு தந்தால் திட்டம் நிறைவேறும். ஆனால், தமிழகம் இதற்கு ஒப்புதல் தரவில்லை. திட்டத்தை நிறைவேற்ற ரயில்வே நிர்வாகமும் முனைப்புக் காட்டவில்லை. இந்த திட்டம் நிறைவேறினால் ரயில்வேக்கு நல்ல வருவாயும், பிராந்திய வளர்ச்சியும் ஏற்படும்.

துறைமுகத்தால் சுற்றுச்சூழல் மாசடைவதாக புகார் வந்தபோது, துறைமுகத் தலைவரை அழைத்துப் பேசினோம். தற்போது, இயந்திரமயமாக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது பாராட்டக்கூடியதாக உள்ளது.

தமிழகத்திலிருந்து மணல் கிடைப்பது அரிதாக இருப்பதால், வெளிநாட்டில் இருந்து மணல் இறக்குமதி செய்ய புதுச்சேரி அரசு அனுமதி தந்துள்ளது. இதன்மூலம் மணல் தேவை ஓரளவு சரியாகும் என நம்புகிறோம்.

நாட்டில், சிறிய மாநிலங்களிடையே சிறந்த சட்டம் - ஒழுங்குக்கான முக்கியத்துவத்தை புதுச்சேரி பெற்றுள்ளது. உயர்கல்வியில் 5 -ஆவது இடத்தில் உள்ளது. சிறிய மாநிலங்களிடையே மருத்துவத்தில் முதல் இடத்தில் புதுச்சேரி உள்ளது. நிர்வாகத்தில் சிறந்த விருதை புதுவை பெற்றுள்ளது. சுற்றுலாவிலும், தூய்மையான பள்ளி என்ற அளவிலும் தேசிய அளவில் சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. பல்வேறு முட்டுக்கட்டைகளுக்கு மத்தியில் புதுச்சேரி அரசு மக்கள் நலனுக்காகப் பாடுபடுகிறது. காரைக்கால் துறைமுகமானது, தொழிலாளர்களுக்கு நல்ல நிலையில் ஊதியத்தையும், அவர்களது பாதுகாப்புக்கு முக்கியத்துவத்தையும் தர வேண்டும். மாநிலத்தில் தொழிற்சாலைகளைக் கொண்டு வந்து வேலைவாய்ப்பு, வளர்ச்சியை ஏற்படுத்தித் தருவதில் அரசு ஒருசதவீதம் கூட பின்வாங்காது என்றார் முதல்வர் நாராயணசாமி.

நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எம். கந்தசாமி, ஆர். கமலக்கண்ணன், சட்டப் பேரவை உறுப்பினர்கள் கீதா ஆனந்தன், கே.ஏ.யு. அசனா, மாவட்ட ஆட்சியர் ஆர். கேசவன் உள்ளிட்டோர் பேசினர். முன்னதாக, துறைமுகத் தலைவர் ஜி.ஆர்.கே. ரெட்டி வரவேற்றுப் பேசினார். நிறைவாக பொது மேலாளர் ராஜேஷ்வர் ரெட்டி நன்றி கூறினார்.

நிகழ்ச்சியின் நிறைவில் செய்தியாளர்களிடம் முதல்வர் வி. நாராயணசாமி கூறியது:

மத்தியிலிருந்து ஆரம்பக் காலத்தில் புதுச்சேரிக்கு 90 சதவீதம் நிதி கிடைத்தது. வெளியுறவுத்துறை கட்டுப்பாட்டிலிருந்து உள்துறை கட்டுப்பாட்டுக்கு வந்தபின் இது 70 சதவீதமாக குறைந்தது. புதுச்சேரியில் ரங்கசாமி ஆட்சியிலிருந்தபோது மத்தியில் தனிக்கணக்கு தொடங்கினார். அப்போதுமுதல் 30 சதவீத நிதி கிடைத்து வருகிறது. இதனால் புதுவைக்கு பெரிய பாதிப்பு ஏற்படத் தொடங்கிவிட்டது. மத்தியிலிருந்து கிடைக்கும் மானியம் என்பது வெகுவாக குறைந்துவிட்டது. முறையாக ரூ. 3,700 கோடி கிடைக்க வேண்டிய நிலையில் ரூ.1,560 கோடி மட்டுமே கிடைக்கிறது. ரங்கசாமி ஆட்சிக் காலத்தில் உள்ள கடன் தொகையில் ரூ. 300 கோடி செலுத்தியுள்ளோம். வடகிழக்கு மாநிலங்களுக்கு 90 சதவீதம் நிதியுதவி செய்யும் மத்திய அரசு, புதுச்சேரிக்கு வெகு குறைவான நிதியை தருகிறது. இதுகுறித்து பிரதமர், நிதியமைச்சர் ஆகியோரை சந்தித்து வலியுறுத்தும்போது, எங்களது நியாயத்தை கேட்கிறார்கள். ஆனால், அதை நடைமுறைப்படுத்த முன்வருவதில்லை. மத்திய அரசு புதுச்சேரி நலனில் மாற்றாந்தாய் மனப்பான்மையைக் கடைப்பிடிக்கிறது என்றார்.

அதிகாரிகள் ஒத்துழைப்புத் தரவில்லை என அமைச்சர் கூறுவது குறித்து கேட்டபோது, ஒரு சில அதிகாரிகள் அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புத் தருவதில்லை. இதற்கான முடிவுகள் விரைவில் தெரியும் என்றார்.

பொய் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலடி தருவது சவாலாக உள்ளது குறித்து துணை நிலை ஆளுநர் கருத்து கூறியுள்ளாரே என செய்தியாளர் கேட்டபோது, ஒரு சிலருக்கு நான் பதில் சொல்ல மாட்டேன் எனக் கூறினார்.

**இயந்திரமயமாதலின் வசதிகள்:** துறைமுகத்தின் சரக்கு ஏற்றுமதி, இறக்குமதி இயந்திரமயமாதலால் நாளொன்றுக்கு சரக்கு இறக்கும் திறன் 40 ஆயிரம் எம்டியாக உயர்கிறது. துறைமுகத்தில் கப்பல்கள் காத்திருப்பு நேரம் இரண்டரை நாள்களாகக் குறையும். கன்வேயர் பெல்டுகளால் சரக்குகள் மூடப்பட்டுள்ளதால் சுற்றுச்சூழல் மாசு ஏற்படாது. 4 ஆயிரம் டிபிஎச் திறன் கொண்ட கன்வேயர் பெல்ட் அமைப்பு வழியே வேகன் லோடிங் மற்றும் டிரக் லோடிக் ஸ்டேஷன் மூலம் சரக்குகளை அனுப்புவதும் சாத்தியப்படும்.